<u>செய்தி வெளியீடு எண்: 656</u> <u>நாள்: 12.10.2007</u>

# செய்தி வெளியீடு

ஹஜ் 2007–ற்கு புனித ஹஜ் பயணம் மேற்கொள்ளவிருக்கும் தமிழ் நாட்டைச் சார்ந்த புனிதப் பயணிகளுக்கு பல்வேறு மையங்களில் புத்தறிவுப் பயிற்சி முகாம் நடத்த தமிழ் நாடு மாநில ஹஜ் குழு ஏற்பாடு செய்துள்ளது. இப்புத்தறிவுப் பயிற்சியின்போது சவூதி அரேபியாவிலுள்ள விதிமுறைகள் மற்றும் இதர நடைமுறைகள், பயண விவரங்கள், ஹஜ் பற்றிய வழிமுறைகள், இந்திய ஹஜ் குழு மற்றும் ஜித்தாவிலுள்ள இந்தியத் துணை தூதரகத்திம் செய்துள்ள இதர ஏற்பாடுகள், மற்றும் இதர தகவல்கள் பற்றி விரிவாக விளக்கிக் கூறப்படும். இப்பயிற்சி முகாம்கள் உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும். புத்தறிவுப் பயிற்சி முகாம்கள் இணைப்பிலுள்ள அட்டவணைப்படி நடைபெறவுள்ளன.

2. ஹஜ்ஜை முறையாக நிறைவேற்ற இப்பயிற்சி முகாம்களில், பெண் புனிதப் பயணிகள் உட்பட ஹஜ் பயணிகள் அனைவரும் அதாவது தேர்வு செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டவர்கள் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளவர்கள் கலந்துகொள்ளுமாறும், அதன்மூலம் ஹஜ் பயணத்திற்கான விதிமுறைகள், வழிவகைகள் மற்றும் நடைமுறைகளை விரிவாகத் தெரிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். பன்னாட்டு பாஸ்போர்ட்டில் தனியார் ஹஜ் நிறுவனங்கள் மூலம் புனித ஹஜ் பயணம் மேற்கொள்ள இருப்பவர்களும் இப்புத்தறிவுப் பயிற்சி முகாமில் கலந்து கொள்ளலாம்.

3. இப்புத்தறிவுப் பயிற்சி முகாம்களை நடத்துவதற்காக சிறப்புப் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களை மாநில ஹஜ் குழு அனுப்பி வைக்க உள்ளது. அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த ஆலிம்கள் நிறைவேற்றுவதற்கா சடங்குகள் மற்றும் நடைமுறைகள் குறித்து உரையாற்றுவார்கள்.

4. இது குறித்து ஏதேனும் தகவல் ஹஜ் புனிதப் பயணிகளுக்கு தேவைப்படும் பட்சத்தில், தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவை தொடர்பு கொள்ளலாம். (தொலைபேசி எண்கள்: 044–28252519 மற்றும் 044–28227617)

## இணைப்பு

| வ. எண் | நாள் / கிழமை | நடைபெறும் இடம் | மாவட்டங்கள்/இடங்கள் உள்ளடக்கியவை |
|---|---|---|---|
| 1. | 16–10–2007<br>செவ்வாய் கிழமை (தமிழ்) /<br>17–10–2007<br>புதன்கிழமை (உருது) | தமிழ் நாடு பைத்துல் ஹுஜ்ஜாஜ்,<br>(ஹஜ் ஹவுஸ்),<br>எண்.2, டிமெல்லோஸ் ரோடு,<br>சூளை, சென்னை–600 112. | சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர். |
| 2. | 16–10–2007<br>புதன்கிழமை | ஹாஜியானா அரங்கம்,<br>திருநகர் காலனி,<br>ஈரோடு–638 003. | ஈரோடு மற்றும் கரூர் |
| 3. | 18–10–2007<br>வியாழக்கிழமை | முஸ்லிம் கல்வி அசோசியேஷன்,<br>42/29, சன்னதி தெரு,<br>கோட்டை, சேலம்–636 001. | சேலம் மற்றும் நாமக்கல். |
| 4. | 20–10–2007<br>சனிக்கிழமை | ஷம்சுல் இஸ்லாம் ஹனஃபி சுன்னத் ஜமாத்,<br>திப்பு நகர், சாராமேடு ரோடு,<br>கரும்புக்கடை, கோயம்பத்தூர்–641 008. | கோயம்பத்தூர் மற்றும் நீலகிரி. |
| 5. | 20–10–2007<br>சனிக்கிழமை | வாவு வாஜீஆ பெண்கள்கலை மற்றும் அறிவியல் கல்லூரி,<br>பல்நோக்கு அரங்கம்,<br>திருச்செந்தூர் ரோடு,<br>காயல்பட்டினம். | தூத்துக்குடி |
| 6. | 21–10–2007<br>ஞாயிற்றுக் கிழமை | ஹஜரத் உமர் (ரலி) கல்வி அறக்கட்டளை,<br>எண்.25, சின்ன வாத்தியார் தெரு,<br>தர்மபுரி-636 701. | தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி |
| 7. | 21–10–2007<br>ஞாயிற்றுக் கிழமை | முஸ்லிம் அனாதை இல்ல வளாகம்,<br>காதிர் நகர், ஹை கிரவுண்ட்ஸ்,<br>திருநெல்வேலி–627 011. | திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி |
| 8. | 22–10–2007<br>திங்கட்கிழமை | ராஜா மஹால்<br>34 டி, திருவிடை மருதூர் ரோடு,<br>கும்பகோணம் (நால் ரோடு அருகில்) | தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம். |

| வ. எண் | நாள் / கிழமை | நடைபெறும் இடம் | மாவட்டங்கள்/இடங்கள் உள்ளடக்கியவை |
|---|---|---|---|
| | | | |
| 9. | 24–10–2007<br>புதன்கிழமை | NMZ விழா அரங்கம்,<br>நாகேஸ்வரன் கோயில் தெரு,<br>ஆம்பூர். | ஆம்பூர், பேர்ணாம்பட்டு மற்றும் உம்ராபாத். |
| 10. | 27–10–2007<br>சனிக்கிழமை | ஹோட்டல் அரிஸ்டோ,<br>டயமண்ட் மஹால்,<br>எண்.2, திண்டுக்கல் ரோடு,<br>திருச்சிராப்பள்ளி–620 001. | திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் பெரம்பலூர் |
| 11. | 27–10–2007<br>சனிக்கிழமை | பெரிய முஹல்லா,<br>ஜும்மா மசூதி,<br>வெளிப்பட்டினம்,<br>சின்னக்கடை தெரு,<br>இராமநாதபுரம். | இராமநாதபுரம் |
| 12. | 28–10–2007<br>ஞாயிற்றுக் கிழமை | மதரஸே முஃபிதே ஆம் ஹால்,<br>1328, நீல்பீல்டு மசூதி தெரு,<br>வாணியம்பாடி -635 751. | வாணியம்பாடி, திருப்பத்தூர் மற்றும் ஆலங்காயம். |
| 13. | 28–10–2007<br>ஞாயிற்றுக் கிழமை | மானா மூனா மன்ஜில்,<br>105, மேட்டுப்பட்டி ரோடு,<br>பேகம்பூர்,<br>திண்டுக்கல்–624 002. | திண்டுக்கல் மற்றும் தேனீ |
| 14. | 29–10–2007<br>திங்கட்கிழமை | மஸ்ஜித் அல்–பிலாஸ் ஜமாத் மசூதி,<br>சுப்ரமணியபிள்ளை தெரு,<br>எஸ்.எஸ். காலனி, மதுரை–16. | மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை |
| 15. | 5–11–2007<br>திங்கட்கிழமை | அஸீஸியா ஷாதி மகால்,<br>அஞ்சுமன் தெரு,<br>வேலூர்-632 004. | வேலூர், மேல்விஷாரம், அரக்கோணம், இராணிப்பேட்டை, வாலாஜாபாத், காட்பாடி, குடியாத்தம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம். |

*****

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.